ஒரு முஸ்லிம் அருள் மறை அல்குர்ஆனை இலகுவாக விளங்கிக் கொள்வதற்கும் அதனை நடை முறை வாழ்வின் வழிகாட்டியாக அமைத்துக் கொள்வதற்கும் துணை புரியக் கூடியவைகளாக தப்ஸீர் நூல்கள் திகழ்கின்றன.

மேற்கத்திய, நவீனத்துவ சிந்தனைகளிலிருந்து முஸ்லிம் சமூகத்தை விடுவிப்பதற்கும் இஸ்லாத்தின் தனித்துவங்களையும் விழுமியங்களையும் அல்குர் ஆனின் நிழலில் நோக்குவற்கும் நவீன கால தப்ஸீர்கள் அளப்பரிய பங்கினை ஆற்றின என்பதில் சந்தேகமில்லை.

அந்த வகையில், இந்நூலானது பிரபலமிக்க நவீன கால தப்ஸீர்கள் பற்றிய உண்மையான வடிவத்தை தெளிவாக அறிந்து கொள்ள முன்வைக்கப்படும் ஓர் காத்திரமான முயற்சியாகும். தப்ஸீர் நூல்கள் பற்றிய அறிமுகம் மாத்திரமன்றி அவற்றின் விளக்க முறைமைகளையும் தப்ஸீர் ஆசிரியர்களின் சிந்தனைப் பின்புலத்தையும் தெளிவாக எடுத்துரைப்பது இதன் சிறப்பம்சமாகும். இலங்கை போன்ற அறபு மொழியை தாய்மொழியாகக் கொள்ளாத சிறுபான்மை முஸ்லிம்களுக்கு பெரிதும் பயன்படத்தக்கதாக இந்நூல் அமையும் என்பது திண்ணம்.

நூலாசிரியர் கபூர்தீன் அவர்களின் அறிவியற்பணி மென்மேலும் தொடர என் வாழ்த்துக்கள். எல்லாம் வல்ல அல்லாஹ் எம் அனைவரின் அமல்களையும் பொருந்திக் கொள்வானாக! ஆமீன்.

கலாநிதி ஏ.எம். முஹம்மது மிஹ்ழார் (நளீமி),
சிரேஷ்ட விரிவுரையாளர்,
இஸ்லாமியக் கலைகளுக்கான
மலேஷியப் பல்கலைக்கழகம்



# நவீனகால தப்ஸீர்கள்

அறிமுகக் குறிப்பு

அஷ்ஷெய்க் என். கபூர்தீன்